உ

வடம் பிடிப்போம் !    குருபாதம்    இடம் பிடிப்போம் !!

## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி நாயகி
## உடனுறை ஆனைக்கா அண்ணல்

# திருத்தேரோட்டப் பெருவிழா

**14.3.2013**





காராருங் கறைமிடற்றெம் பெருமான் தன்னைக்
காதில் வெண்குழையானைக் கமழ் பூங்கொன்றைத்
தாரானைப் புலியதளினா டையானைத்
தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியார மார்பினானைப்
பிஞ்ஞகனைத் தெய்வ நான்மறைகள் பூண்ட
**தேரானைத் திருவானைக் காவுளானைச்**
செழுநீர்த் திரளைச் சென்றாடினேனே.

## திருஅண்ணாமலையார் ட்ரஸ்டின்

# மூன்றாம் ஆண்டு அழைப்பிதழ்

960057 5001 / 76677 71673 / 96988 99799

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை உடனுறை ஜெம்புகேசுவரர் திருக்கோயில்

# பங்குனி திருத்தேரோட்ட பெருவிழா

## திருஅண்ணாமலையார் ட்ரஸ்டின்

# மூன்றாம் ஆண்டு அழைப்பிதழ்

உலக உயிர்கள் யாவையும் உய்விக்கும் பசுபதியான சிவப்பரம்பொருள் தத்துவமயமான தேரில் ஏறி முப்புராதிகளை முருவலினால் எரித்தருளினார்.

திரிபுரசங்கார நிகழ்வினை ஆன்மக்களுக்கு உணர்த்தி, ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் கெடுவதற்காக இரதோற்சவம் (தேரோட்டம்) நடத்தப்படுகிறது. சிவாலய வழிபாட்டின் ஒற்றுமைச் சிறப்பினை அவசியத்தினை உலகிற்கு எடுத்துக்காட்டும் திருஆனைக்கா திருத்தலத்தின் திருத்தேரோட்டத் திருவிழா நிகழ்வு **பங்குனி மாதம் 1-ம் தேதி (14.3.2013) நடைபெற உள்ளது.** தேரார் திருவீதியில் தேவர்குழாத்துடன் இணைந்து பழ அடியார்களுடன் கூடி பரமன் தொல்புகழ்பாடி ஆடி ஈடில்லா இணையார் திருவடி இன்பம் பெற்றிட, அண்ணாமலையார் டிரஸ்ட். வேடமும் நீறும் விளங்கக் கொண்ட அன்பர் பெருமக்களை வணங்கி வரவேற்கின்றது. ஊர் கூடி உளமாற தேரிழுக்கும் பெருவிழா நிகழ்வில்

எங்கள் குருநாதர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் சொ.கிருஷ்ணன் ஐயா அவர்கள் நல்லாசி முன்னின்று வழிகாட்ட, சிவத்திரு. சின்னதுரை ஐயா அவர்களின் சிறப்பான செயல்பாட்டின் துணையோடு நடைபெறும் நன்மலர் கொண்டு சிவனடி வழிபாடாற்றி வணங்கும் சிவபூசா துரந்தர்களுக்கும் நதியும் மதியும் நற்கொன்றையும் கொண்ட பிரானடி மறவாத செல்வர்களுக்கும் உண்டி நாலுவிதத்தில் சுவை ஆறுதிறத்தினில் அன்னம்பாலிப்பு ஆறுநாட்டு வேளாளர் அன்னதான சத்திரத்தில் நடைபெற உள்ளது.

**தேரிழுக்க வாரீர் !     தேவதேவன் அருள்பெறுவீர் !!**

ஆதிப் பிரமன் திருவானைக்காவில் அமாந்தார்கு இனிதெடுத்த
காதற் சிறப்புத் திருவிழாக் கவினப் புரிந்தோர் தெரிசித்தோர்
தீது அற்ற அவனி முழுது ஆண்டு தேவர் போகம் பெரிதார்ந்து
சாதல் பிறப்பு தலைப்படா தனி வீட்டின் பத்து அழுந்துவார்



தேவர்பிரானின் திருத்தேர் விழாவிற்கு
அழைத்து மகிழும்

**திருஅண்ணாமலையார் ட்ரஸ்ட்**
**ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி**

**0431-2435005**
**www.thiruannamalaiyartrust.com**

---

குறிப்பு :

**அன்னம் பாலிப்பு நடைபெறும் இடம் :**

**ஆறுநாட்டு வேளாளர் அன்னதான சத்திரம்**
**திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி**



## குறிப்பு

**14.3.2013 வியாழக்கிழமை அன்று அதிகாலை 4.30 மணி**
**ஆன்மார்த்த சிவ பூஜை** நடைபெறும்
செல்வன் கழல் ஏத்தும் செல்வர்கள் கலந்துகொள்ளுமாறு
கனிந்து வேண்டப்படுகிறது.
சிவபூசைச் செல்வர்கள் தங்கள் வருகையை தெரிவித்தால்
வகையாக வழிபாட்டுப் பொருட்களைத் திரட்டிட ஏதுவாகும்.
இஃது வழிபாட்டில் ஒரு முழுநிறைவினை அளிக்கும் என
பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## அண்ணல் பணிக்கு அழைத்து மகிழும் திருக்கூட்டங்கள்

ஆனைக்கா அர்த்தஜாம அடியார்கள், திருவானைக்காவல்
பன்னிரு திருமுறை வார வழிபாட்டுக் கழகம், திருவானைக்காவல்
ஸ்ரீ அவனீஸ்வரர் ட்ரஸ்ட், திருவானைக்காவல்
அம்மையார் அருள் நெறி மன்றம், திருவானைக்காவல்

என்றும் திருவருள்படி

J.B.R. ஆப்செட் பிரிண்டர்ஸ், அல்லிமால் தெரு, திருச்சி - 8 Cell : 9524521069